திராவிடத்தால் வாழ்கிறோம்

1312

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்

- வாழ்வோம்

‘கயிறு’ சிறார் நாவல், மேடை நாடகமாக...



பள்ளி மாணவர்கள் மற்றும் சிறார்களின் கைகளில் கட்டப்படும் வண்ணக் கயிறுகள் (சாதியக் கயிறுகள்) மூலமாக, அவர்கள் மனத்தில் மறைமுகமாகத் திணிக்கப்படும் சாதிப் பாகுபாடுகளை ஆழமாகப் பேசிய சிறார் நாவல் ‘கயிறு’.

எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய இந்த நூல், சிறுவர்கள் விளையாடும் கயிற்றுப்பந்து விளையாட்டின்மூலம், குழந்தைகளின் உலகிற்குள் நுழையும் சாதியக் குறியீடுகளை மிக எளிய முறையில், அதே நேரம் ஆழமான அறிவியல் மனப்பான்மையோடு கேள்விக்கு உட்படுத்தியது. தமிழில் வெளிவந்த சிறார் நூல்களில் மிகக் குறுகிய காலத்தில் இலட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையானது, இந்த நூல்.

வளரிளம் பருவத்தினருக்கும் பள்ளி மாணவர்களுக்கும் சமத்துவம், பகுத்தறிவு மற்றும் புதிய சிந்தனைகளை விதைக்கப் பரிந்துரைக்கப்பட்ட இந்த நூலை 1 ரூபாய் விலையில் கொண்டு சேர்த்தது, ‘சீர் வாசகர் வட்டம்’. தற்போது அவர்களின் முன்னெடுப்பில், மேடை நாடகமாகவும் ‘கயிறு’ நிகழ்த்தப்பட உள்ளது. செப்டம்பர் 14 திங்களன்று, மாலை 5.30 மணிக்கு சென்னை தியாகராய நகர், சர் பிட்டி தியாகராயர் அரங்கத்தில், ‘சீர் மேடை’ சார்பில், இந்த நாடகம் நடைபெற உள்ளது.

ப்ளாஷ்பேக்

விருப்பு வெறுப்பு இல்லாமல் ஆய்வு!

முனைவர் பொன்னேரி சிவா

2012-ஆம் ஆண்டில், நான் சென்னை பல்கலைக்கழகத்தில், ‘முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் ஆட்சியில் திராவிடச் சிந்தனைகள்’ என்கிற தலைப்பில், முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டேன். அந்த ஆய்வு தொடர்பாக, தலைவரைச் சந்தித்துப் பேசியபோது எடுத்த படம். ‘நீ கட்சியில இருக்கய்யா.. ஆனால், ஆய்வு விருப்பு வெறுப்பு இல்லாமல் செய்யணும்’ என்கிற ஆலோசனை அளித்தார், நம் மகத்தான தலைவர்.

– முனைவர் பொன்னேரி சிவா, தலைமைக் கழகப் பேச்சாளர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

சமூக நீதியை ஒழிக்க, புதிய சூழ்ச்சி!

பிரதமர் மோடி தலைமையில் உள்ள ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. ஒன்றிய ஆட்சியில் தொடர்ந்து, ‘சாண் ஏறினால் முழம் சறுக்குதல்’ என்பதைப் போல, ‘சாண் தந்தால்’ ‘முழம் பறித்தல்’ என்ற புதுவகை சூழ்ச்சிமூலம், அரசியலமைப்புச் சட்ட அடிப்படைக் கட்டுமானத்தைத் தகர்க்கும் வகையில், சட்ட விரோத, நியாய விரோத முறைகளின்மூலம் ஒடுக்கப்பட்டோரது உரிமைகள் பறிக்கப்படுவது, தொடர்ந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நடைபெற்று வருவது கொடுமையிலும் கொடுமை!

பொய் வழக்கு ஒன்றின் தீர்ப்பு காரணமாக ஒடுக்கப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்ட சமூக நீதி, தந்தை பெரியாரின் போராட்டத்தால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம்மூலம் மீட்கப்பட்டது. அதனை அறவே திரித்து, அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளுக்கே தவறான விளக்கம் தந்து, உச்ச நீதிமன்றத்தின் உயர்சாதி ஆதிக்க அதிகார வாய்ப்பினைப் பயன்படுத்தி, பொருளாதார அளவுகோலை நுழைத்தனர்.

‘பொருளாதார அடிப்படை செல்லாது’ என்ற பழைய உச்ச நீதிமன்றத் தீர்ப்பைப் புறந்தள்ளி, பொருளாதாரத்தில் நலிந்த அரிய உயர் சாதியினருக்கு, குறிப்பாகப் பார்ப்பனர்களுக்கு, 10 சதவிகித இடஒதுக்கீடு என்று திணித்து, உள்ளே கொண்டுவந்து, ‘50 சதவிகிதத்திற்கு மேலா?’ என்று முன்பு கேட்ட அதே ஆரிய அதிகார வர்க்கம், நீதித் துறைகளிலும் கூடுதல் 10 சதவிகிதம் உயர் சாதி ஏழைகள் (EWS) மூலம் என்றவுடன், தலையசைத்து சட்ட சம்மதம் தந்து, ஒரே வாரத்தில் நிதி ஒதுக்கீடு உள்பட தரப்பட்ட அதிசயம் நடந்தது. தற்போது, மக்கள்தொகையில் 100-க்கு 6.5 விழுக்காட்டிற்குமேல் உள்ள

● ஆசிரியர் கி.வீரமணி

பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் இடஒதுக்கீட்டை ஒழித்துக்கட்ட, ஒரு பெரும் சூழ்ச்சித் திட்டத்தை மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்மூலம் ‘சட்ட ரீதியாகச்’(!) செய்ய முனைப்புக் காட்டி வருகின்றனர்.

தி.மு.க. அரசு எடுத்த நிலைப்பாட்டிற்குக் காரணம் என்ன?

சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படும் என்றுதானே பிரதமர் மோடி வெளிப்படையாக அறிவித்தார், அதற்குப் பின்னரும் இப்போது ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கும் இடையில் என்ன நடந்தது?

இடஒதுக்கீடு தொடர்பான வழக்குகள் வரும்போதெல்லாம் அளவிடற்குரிய தரவு (QUANTIFIABLE DATA) இருக்கிறதா என்றுதானே உச்ச நீதிமன்றம் கேட்கிறது? அதை ஒன்றிய அரசுதானே சாதிவாரி கணக்கெடுப்பின் (CASTE-WISE CENSUS) மூலம் எடுக்க முடியும். மாநில அரசுகளால் சமூக நீதி சர்வே மட்டும்தானே எடுக்க முடியும்? அந்த சர்வேயும் இடஒதுக்கீடு வழங்குவதற்குப் போதுமானதில்லை என்பது பீகாரிலும், கருநாடகத்திலும் கிடைத்துள்ள அனுபவங்கள் அல்லவா? அதனால்தான், தமிழ்நாட்டில் கடந்த முறை ஆட்சியில் இருந்த தி.மு.க., சாதி வாரி கணக்கெடுப்பு (சென்சஸ்) வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்திவந்தது. அதற்கு மாறாக ஒன்றிய அரசு, சென்சஸ் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தாமல், சர்வே ஏன் எடுக்கவில்லை என்று மாநில அரசுகளைக் கேட்பதால், அரசியல் உள்நோக்கங்களைத் தவிர வேறு என்ன பயன்?

பல்வேறு முறையீடுகள் வைத்து, போராட்டங்களும் நடத்தி, வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டும், 95 ஆண்டுகளுக்குப் பிறகு எடுக்கப்படும் சாதிவாரி கணக்கெடுப்பில், பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான கணக்கெடுப்பில் மட்டும் குழப்பங்களை ஏற்படுத்துவதும், குழப்பமான முடிவுகள் கிடைக்கும் வகையிலேயே முழுமையற்ற விவரங்களைச் சேகரிப்பதும், இந்நாட்டின் பெரும்பான்மை மக்களான பிற்படுத்தப்பட்டோருக்கு அநீதி இழைப்பதாகும்.

சாதிவாரி கணக்கெடுப்பை முன்பு எதிர்த்த பா.ஜ.க., கடந்த பீகார் மாநிலத் தேர்தலின்போது, சாதி வாரி கணக்கெடுப்பு நடத்துவதாக ஒப்புக்கொண்டுவிட்ட நிலையில், இப்போது ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. அரசும், ஆர்.எஸ்.எஸ். ஆதரவு அதிகார வர்க்கமும் ஒரு புதிய சூழ்ச்சியை, தந்திரத்தை நுழைத்து, அதனை அறவே மறுக்க முடிவுசெய்துள்ளன.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் (OBC) என்று இருப்பதால், ‘வகுப்பு என்றுதான் இருக்கிறது. ‘சாதி’ என்று இல்லை (அரசியலமைப்புச் சட்டத்தில் CLASS - NOT CASTE என்ற) ஒரு குயுக்தியான வாதத்தைக் காரணம் காட்டி, ஏற்கெனவே நாட்டிலுள்ள சமூக நீதி, இட ஒதுக்கீட்டையே ஒழித்துக்கட்டத் தொடங்கிவிட்டனர்.

ஒட்டுமொத்த பிற்படுத்தப்பட்ட மக்களும், ஒடுக்கப்பட்ட (எஸ்.சி., எஸ்.டி.,) மக்களும் ஒருங்கிணைந்து, அறவழியில் போராட்டக் களம் அமைக்கவேண்டிய அரிய தருணம் வந்துவிட்டது!

சட்டமன்றத்தில் பொறுப்புடன் செயல்படுவோம்!

கருவூலம்

1962-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற கழக வேட்பாளர்களுக்கு, மார்ச் 4 அன்று, சென்னை கடற்கரையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், பேரறிஞர் அண்ணா உரையாற்றினார். “திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு விடுதலை இயக்கம் தான்; அதே நேரத்தில் சட்டமன்றத்திற்குள் செல்லும் போதும் வெளியே வரும்போதும், நமது தோழர்கள் ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்ற முழக்கத்துடன் மட்டும் திரும்பிவிட மாட்டார்கள். பொறுப்புள்ள எதிர்க் கட்சியினராகத்தான் பணியாற்றுவார்கள்” என்று வாழ்த்தி அனுப்பினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900